# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## TROP.NO.26/2022

PW1–வசந்தா நாள்.06.08.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

கடன் சம்மந்தமாக நான் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியும். இந்த வழக்கில் எதிர்மனுதாரர்கள் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு வட்டிக்கு பணம் வாங்கும்போது ஜாக்கிரதையாக நான் கொடுக்கும் பணத்திற்கு ரசீது வாங்க வேண்டுமென்று என்ற விவரம் எனக்கு தெரியாதா என்றால் தெரியாது. நான் இந்த மனுவில் கூறியுள்ள விவரங்களை 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கின் எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. முதலில் நான் ரூ.5லட்சம் பெற்றுக்கொண்டதாக எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. கட்டயாத்தின் பேரில் செட்டிக்குளம் பத்திர அலுவலகத்திற்கு நான் சென்றதாக வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மருத்துவ செலவிற்காக நான் கடன் வாங்கியதாக எதிர்வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. பாப்பாத்தியின் மகன் பெயர் சரவணன் ஆகும். நான் 2ம் எதிர்மனுதாரரிடம் ரூ.6லட்சம் கடன் வாங்கினேன் என்றும், மனுவில் கூறியுள்ளது போன்று வட்டி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. ரூ.5லட்சம் கடன் வாங்கினேன். ரூ.6லட்சம் நான் கடன் வாங்கிய விவரம் சாட்சிகளுக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனக்கு திருச்சியில் நிலம் கிடையாது. நான் திருச்சியில் உள்ள நிலத்தை விற்று பணம் கொடுத்ததாக வழக்கில் கூறியுள்ளேன். எந்த வருடம் விற்றேன் என்று ஞாபகமில்லை. யாருக்கு விற்றேன் என்று ஞாபகமில்லை. காவல்நிலையத்தில் இந்த வழக்கு பிரச்சனை சம்மந்தமாக புகார் கொடுத்தேன். அது சம்மந்தமாக மேற்கொண்டு விவரங்கள் தெரியாது. நிருபண வாக்குமூலத்தில் அந்த விவரம் பற்றி கூறியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. வக்கீல் நோட்டீஸ்க்கு பதில் அனுப்பினேன். வழக்கிற்காக அதில் விவரங்களை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**சாட்சிக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறியதால் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.